14-07-2011

## தலைப்பு : தமிழகத்தில் சாதியம் தொடர்பான இரு ஆவணப்படங்களும் கலந்துரையாடலும்

**படக்காட்சியின் பின்னர் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,**

படத்தில் காண்பிக்கப்படுவது போன்ற வெளிப்படையான சாதி ஒடுக்குமுறை தற்போது இலங்கையில் இல்லை. ஆனால் முன்னர் இதேயளவு தீவிரத்தோடு இருந்தது.

குடை பிடிக்கத் தடை, சைக்கிளோட்டத்தடை, இரட்டைக் குவளை முறை, குறித்த உடைகளை அணியத்தடை போன்றன இதற்கு எடுத்துக்காட்டுகள்.

வன்னியில் குடியேற்றங்கள் நடைபெற்றபோதும் கூட சாதி அடிப்படையிலேயே ஆரம்பத்தில் குடியேறினார்கள். ஆனால் படித்த இளைஞர்களுக்கான விவசாயத்திட்டத்தின் கீழ் விசுவமடுவில் குடியேறிவர்களிடம் இந்தப்பண்பு காணப்படவில்லை.

அறுபதுகளுக்குப் பின்னே சாதி விடுதலை உணர்வு முனைப்புப்பெற்றது.

சாதி விடுதலைப் போராட்ட காலத்தில் ஆதிக்க சாதி வெறியர்கள் ஆயுதங்கள் கொண்டும் தாக்கினார்கள்.

"தலித்" என்ற சொல் இலங்கையில் அவ்வளவு பொருந்தக்கூடியதல்ல. இச்சொல் மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து வந்தது. தமிழ் நாட்டின் சாதி அமைப்பிற்குப் பொருத்துவதற்குக்கூட இந்தச்சொல் போதுமானதல்ல.

"தலித்" அரசியலை NGO க்களே முன்கொண்டு செல்கின்றன. இந்த அரசியல் ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டிணைவுக்குச் சவாலாகவே அமைகிறது. வர்க்கப்போராட்டம் தேவையற்றது என்ற கருத்தையே நேரடியாகவும் மறைமுகமாகவும் தலித் அரசியல் வலியுறுத்துகிறது. "பெண்ணிய" அரசியலும் இவ்வாறே
வர்க்க ஒருங்கிணைவினைத் தடுக்குமுகமாக மக்களைப் பிரித்தல் ஏகாதிபத்தியத்துக்குச் சாதகமானது.

ஐரோப்பாவிலும், மனிதப்பரிணாமத்தின் ஒரு கூறான சாதிகள் தோன்றின. இருந்திருக்கின்றன. அகமண முறையும் ஏற்றதாழ்வும் கூட இருந்திருக்கின்றன.

இன்றுள்ள பல சாதிப்பெயர்கள் இதற்குச்சான்று (Butcher, tailor) ஆனால் அவை இந்தியச்சூழலைப்போல மிகத்தீவிரமாக இன்று இல்லாமலிருப்பதற்கான காரணங்கள் வருமாறு,

1. நிலமானியச் சமுதாய காலத்தில் திருச்சபையின் அதிகாரத்தில் ஐரோப்பா இருந்தபோது, திருச்சபை தன் அதிகாரத்தைத் தக்கவைக்க அங்கிருந்த சாதியமைப்போடு சமரசம் செய்து அதனைப் பயன்படுத்தவில்லை.

ஆனால் இந்திய-இலங்கைச் சூழலில் இந்துமதம் சாதி அடுக்குமுறையோடு சமரசம் செய்து, வர்ணாச்சிரம தர்மம் என்ற பெயரில் அதனை நிறுவன வடிவாக்கி அதன் மூலமே தன் அதிகாரத்தைத் தக்கவைத்தது.

2. முதலாளியப்புரட்சி ஏற்பட்டபோதும் ஐரோப்பாவில் முதலாளியம் தன் அதிகாரத்தைத்தக்கவைக்க சாதியோடு சமரசம் செய்யவில்லை. அதனால் அங்கே வர்க்க சமுதாயம் முனைப்போடு தோற்றம் பெற்றது.
அதே காலப்பகுதியில் இந்தியச்சூழலில் காலனி ஆதிக்கம் நிலவியது. காலனியாதிக்கம் ஏற்கனவே இங்கிருந்த தீண்டாமை, சாதிய, வர்ணாச்சிரம படிநிலைகளோடு சமரசம் செய்துகொண்டு அதையே தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கும் பயன்படுத்திக்கொண்டது. இதனால் தொழில் வளர்ச்சி, காலனியம் மூலம் கூட சாதி சிதையாமல் மேலும் இறுக்கமடைந்தது.

### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

21 - 07 -2011

இயங்கியல் பொருள்முதல்வாதம்
- சி. கா. செந்திவேல்

28 - 07 -2011

அவுஸ்திரேலியாவில் தமிழும் தமிழரும்
- மாவை நித்தியானந்தன்



சுவாமி விபுலாநந்தர் (மார்ச் 27, 1892 - ஜூலை 19, 1947)
கிழக்கிலங்கையில் பிறந்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இலக்கியம், சமயம், தத்துவஞானம், அறிவியல், இசை முதலிய பல துறைகளில் கற்றுத் தேர்ந்த புலவர்.

சுவாமி அவர்களின் தமிழ்த் தொண்டால் தலை சிறந்து விளங்குவது அவருடைய யாழ் நூல் ஆராய்ச்சியாகும்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்ச்சித்திசையில் மாற்றியமைக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

# இயங்கியல் பொருள்முதல்வாதம்

*21-07-2011 அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்*

**-சி. கா. செந்திவேல்**

1. இயங்கியல் - *Dialectics*
2. பொருள்முதல்வாதம் - *Materialism*

**இயங்கியல்**

* பண்டைய கிரேக்கத்தில் காணப்பட்ட ஒரு முறைமை யாதெனில் எதிர்வாதத்தில் காணப்படும் முரண்களை வெளிப்படுத்தி அந்த முரண்களை வெளிப்படுத்துவதன் மூலம் உண்மைகளைக் கண்டறிவது. இதனைக் குறிக்க Dialego எனும் கிரேக்கச்சொல் பயன்பட்டது. சிந்தனையில் காணப்படும் முரண்பாடுகளை ஒன்றுக்கு எதிராக ஒன்றை மோதவிட்டு அதனூடாக உண்மைகளைக் கண்டறிய தத்துவவாதிகள் முற்பட்டனர்.

* இந்த முறையில் பிற்காலத்தில் இயற்கைத் தோற்றன்கள் பற்றியும் அறிய முற்பட்டனர். விஞ்ஞானத்தின் வளர்ச்சியானது இவ்வணுகுமுறையை வளர்த்தெடுத்தது.

* இயற்கை எப்போதும் இயங்கிக்கொண்டிஉர்க்கிறது என்றும் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உள்ளாகி வருகிறது என்றும் இயங்கியல் கூறுகிறது.

* பிரபஞ்சத்தில் உள்ள இயற்கையான அனைத்துப்பொருட்களும் இயங்குவதற்கு, வளர்ச்சி பெறுவதற்கு, மாற்றமடைவதற்கு அடிப்படை அப்பொருட்களுக்குள் உள்ள நேரெதிர் சக்திகளுக்கிடையிலான முரண்பாடே என்பதனை இயங்கியல் வற்புறுத்துகிறது.

* முரண்பாடும் போராட்டமும் சர்வ வியாபகமானவை எனக்கூறும் இயங்கியல், வளர்ச்சி என்பது எதிர்மறைகளுக்கிடையே நடக்கும் போராட்டத்தின் விளைவானதொன்றாகும் என்கிறது.

* இம்மாற்றத்தினதும் வளர்ச்சியினதும் ஒரு முக்கிய விடயமாக இயங்கியல் கூறுவது என்னவெனில், எண்ணிக்கை குணாம்சமாக மாறுவது என்பதாகும். அதாவது அளவில் ஏற்படும் மாற்றம் பண்பு மாற்றத்தை தோற்றுவிக்கிறது என்பதாகும்.

* உலகில் எந்தவொரு பொருளும் தனித்து இருப்பதில்லை. கண்களுக்கோ ஏனையைய புலன்களுக்கோ தெரியதெள விட்டாலும் அவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாகவே இருந்து வருகின்றன. பொருட்களுக்கிடையிலான இடைத்தொடர்புகள் இருந்துவருகின்றன. ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன.

* இயங்கியல் அடிப்படையில் தோற்றம், வளர்ச்சிமாற்றம், மறைவு, அழிவு, புதியன தோன்றல் என்பன இடையறாது நடைபெறுவதை விஞ்ஞானம் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தி வருகிறது.

* மாற்றம் வளர்ச்சி என்பன ஒரே சுற்றுவட்டத்தில் இடம்பெறுவதில்லை. மேலே சென்று பழைய குணநிலையிலிருந்து புதிய குணநிலைக்கு உயர்ந்து செல்கிறது. அவை இலகுவானதாக அமைவதில்லை. சிக்கலானதாகவும் கடுமையானதாகவும் கூட அமைந்துவிடுகிறது.

**பொருள்முதல்வாதம்**

* கருத்துக்களில் இருந்து பொருள்கள் தோன்றுவதோ அல்லது பிம்பத்தை வெளிப்படுத்துவதோ இல்லை.

* மாறாக, பொருட்களி, அவற்றின் பிம்பமாகவே கருத்துக்கள் தோன்றுகின்றன என்பதையே பொருள்முதல்வாதம் கருதுகிறது.

* நமது ஐம்புலன்களையும் தாக்கி இயங்கவைத்து உணர்ச்சியைச் சிருஷ்டிப்பது எதுவோ, அதுவே பொருள் என்பதாகும். உணர்ச்சியின் வாயிலாக நுகர்ந்து பெறப்படும் உண்மையே பொருள் என்பதாகும்.

* இப்பொருட்களை முதன்மையாகக் கொண்டு அணுகும் விஞ்ஞான முறைமையே பொருள்முதல்வாதமாகும்.

* அத்தகைய பொருள்முதல்வாதத்தை இயங்கியல் என்னும் அணுகுமுறை கொண்டு நோக்குவதே இயங்கியல் பொருள்முதல்வாதம் எனப்படுவதாகும்.

**படிக்கவேண்டிய நூல்கள்**

* மூலதனம் - முதல் பாகம் - கார்ல் மார்க்ஸ்
* இயற்கையின் இயங்கியல் - பி. ஏங்கல்ஸ்
* இயங்கியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும் - ஜே. வீ. ஸ்டாலின்
* முரண்பாடுபற்றி - மாஓசேதுங்.